**<u>பொள்ளாச்சி நகராட்சி</u>**

**<u>சிறப்புக் கூட்டம்</u>**

**10.01.2023 தேதி செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணிக்கு பொள்ளாச்சி நகராட்சி நகரமன்ற கூட்டரங்கில் நடைபெற்ற சிறப்புக் கூட்ட நடவடிக்கைகள்.**

| வ. எண் | பொருள் விபரம் | தீர்மானம் |
|---|---|---|
| 1 | 1920ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 81(A) ன் கீழ் எந்தவொரு நகர மன்றத்தையும் பிரிவு 78 (1) ல் கூறப்பட்டுள்ள சொத்துவரியினை குறிப்பிட்ட விகிதத்தில் குறிப்பிட்ட நாளிலிருந்து விதித்து ஆணையிட மாநில அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த அதிகாரத்தின் படி பொது சொத்துவரி சீராய்வினை 01.04.2022 முதல் அமுல்படுத்த அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்.1 நாள்.01.04.2022ன் படி இந்நகர் மன்ற தீர்மான எண் 24 மற்றும் 25 நாள்.11.04.2022 பொள்ளாச்சி நகராட்சியில் சொத்துவரி உயர்வு செய்ய தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டு ஆட்சேபனைகள் பெறப்பட்டு மாவட்ட அரசிதழ் 15.06.2022 ல் வெளியீடு செய்யப்பட்டு, சொத்துவரியானது அரசாணைக்கிணங்க நிர்ணயம் செய்யப்பட்டு பொள்ளாச்சி நகராட்சியில் அமுல்படுத்தப்பட்டுள்ளது.<br>மேலும், தற்பொழுது உயர்த்தப்பட்ட சொத்துவரியானது இதர நகராட்சிகளை காட்டிலும் அதிகபட்சம் உயர்வாக உள்ளதாக ஆட்சேபனைகள் பெறப்பட்டதின் அடிப்படையில் பொதுமக்கள் நலன் கருதி | **தீர்மானம் எண்.426**<br>**நகர் மன்ற தீர்மானம் எண்.183 நாள்.08.06.2022ஐ ரத்து செய்திட தீர்மானிக்கப்பட்டது. மேலும் அரசானை எண்.52 நாள்.30.03.2022 ன்படி நடவடிக்கை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| | இந்நகர மன்ற தீர்மான எண்.183 நாள்.08.06.2022 (Component Value) வரி விகிதம் மட்டும் 19.55% சதவிதத்திலிருந்து 17.55% சதவீதமாக குறைத்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.<br>இந்நிலையில் 1920 ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 36(1)இன் கீழ் இந்நகர மன்றத்தால் இயற்றப்பட்ட தீர்மானத்தை ரத்து செய்யவும் அதிகாரம் உள்ளது என அரசு கருதுவதாகவும், அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே வரி விகிதம் (Component Value) குறித்து பொள்ளாச்சி நகராட்சியால் இயற்றப்பட்ட நகர மன்றத் தீர்மானம் எண். 183 நாள். 08.06.2022 ஐ இரத்து செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.<br>மேலும், அரசாணை எண்.52ல் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விதிமுறைகளுக்குட்பட்டு நிர்ணயிக்கப்பட்ட சொத்துவரி உயர்வினை அமுல்படுத்த மன்றம் அனுமதிக்கலாம்.<br>**<u>அலுவலகக் குறிப்பு :</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.1960/2022/அ1** | |

**(ஒப்பம்) திருமதி.ந.சியாமளா**
**நகர்மன்ற தலைவர்**
**பொள்ளாச்சி**

**நகராட்சி**

**//உண்மை நகல்//**

**ஆணையாளர்(பொ)**
**பொள்ளாச்சி நகராட்சி**